**பிப்ரவரி – 24**

# TNPSC துளிகள்

- ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் கல்வி பற்றிய தகவல்களை அறிய உதவும் வகையில், பெற்றோர் மற்றும் ஆசிரியர் சங்கத்திற்காக APPA (Anaithu Palli Parent Teachers Association) என்ற செயலியை தமிழ்நாடு முதல்வர் அறிமுகப்படுத்தியுள்ளார்.
- அடுத்த ஆண்டு பிப்ரவரி 19 ஆம் தேதி வரை ஒவ்வொரு நாளும் பல்வேறு இடங்களில் சுமார் 1,000 பேருக்கு உணவு வழங்கும் வகையிலான 'அமுத கரங்கள்' திட்டம் ஆனது கொளத்தூரில் தொடங்கப்பட்டுள்ளது.
- இந்தியாவின் விளையாட்டுத் துறை வளர்ச்சியை ஆதரிக்கும் வகையில், இந்தியாவில் உருவாக்குதல் சவால் தொடர் 1 - Create in India Challenge Season 1 என்ற திட்டத்தின் ஒரு பகுதியாக பாரத் டெக் ட்ரையம்ப் திட்டம் (TTP) ஆனது தொடங்கப்பட்டுள்ளது.
- புது டெல்லியில் நடைபெறும் 98வது அகில பாரதிய மராத்திய சாகித்ய சம்மேளனம் என்பதனை (அகில இந்திய மராத்திய இலக்கிய மாநாடு) இந்தியப் பிரதமர் தொடங்கி வைத்தார்.
- ஒரு இந்திய-அமெரிக்கரான காஷ் படேல் அமெரிக்காவின் புதிய மத்தியப் புலனாய்வு வாரிய (FBI) இயக்குநராக அதிகாரப்பூர்வமாகப் பதவியேற்றார்.
- மாலத்தீவின் மாலே எநனுமிடத்தில் நடைபெற்ற 13வது ஆளுகைக் குழுக் கூட்டத்தில், வங்காள விரிகுடாவில் அரசுகளுக்கிடையேயான அமைப்பின் தலைவராக இந்தியா பொறுப்பேற்றுள்ளது.
- குஜராத் நிதியமைச்சர் தேசிய eVidhan செயலி (NeVA) மூலமாக முதன்முறையாக சட்ட மன்றத்தில் 2025-26 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையினை முழுவதும் ஒரு எண்ணிம முறையில் தாக்கல் செய்துள்ளார்.
- மைக்ரோசாப்ட் நிறுவனமானது, எண்ணிம உலகிலும் நேரடி உலகிலும் பரிமாறப் படும் படங்கள் மற்றும் மொழி ஆகிய இரண்டையும் நன்கு புரிந்து கொண்டு, ஒரு செயலியைப் பயன்படுத்துதல் அல்லது ஒரு எந்திரத்தினை நகர்த்துதல் போன்ற சில பணிகளை மேற்கொள்ள மேக்மா எனப்படும் ஓர் அடிப்படை மாதிரியினை அறிமுகப் படுத்தியுள்ளது.
- சமீபத்தில் இந்தோனேசியாவில் உள்ள அதிகளவில் செயலில் உள்ள எரிமலைகளில் ஒன்றான மவுண்ட் டுகோனோ சமீபத்தில் வெடித்தது.
- இராஜஸ்தான் மாநிலம் பருவநிலை மாற்றத் தகவமைப்புகள், காடுகள், சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர்ப் பெருக்கம் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்தும் முதல் "பசுமை சார் நிதிநிலை அறிக்கையினை" தாக்கல் செய்துள்ளது.
- அசாமின் வளங்கப்பாளர் பூர்ணிமா தேவி பர்மன், வனவிலங்கு வளங்காப்பில் அவர் ஆற்றிய சிறப்பானப் பங்களிப்பிற்காக டைம்ஸ் இதழின் 2025 ஆம் ஆண்டின் சிறந்தப் பெண்மணியாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.


# தமிழ்நாடு செய்திகள்

## பாண்டியர் காலத்து கல்வெட்டுகள்

- இந்தியத் தொல்லியல் துறையின் (ASI) கல்வெட்டு அறிவியல் ஆய்வாளர்கள் மதுரை மாவட்டத்தின் மேலூர் தாலுக்காவில் உள்ள கம்பூர் அருகே அமைந்த மலைக் குன்றுகளில் கிடைத்த மூன்று கல்வெட்டுகளில் உள்ள சில தகவல்களைப் படியெடுத்து

உள்ளனர்.

- இந்தக் கல்வெட்டுகள் ஆனது, 13 ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த பாண்டிய மன்னன் முதலாம் மாறவர்மன் சுந்தரப் பாண்டியன் காலத்தைச் சேர்ந்தவை ஆகும்.
- இதன் முதல் கல்வெட்டில் பாஸ்கரன் என்ற கிராமத் தலைவர் அங்கிருந்த ஒரு சிவன் கோவிலுக்கு நிலத்தினைத் தானமாய் அளித்ததை அது குறிப்பிடுகிறது.
- மற்ற இரண்டு கல்வெட்டுகளில் கம்பூர் மக்கள் பற்றியத் தகவலும், தென்ன கங்க தேவன் என்ற மற்றொரு கிராமத் தலைவன் சிறப்புப் பூஜைகளுக்காக நிலத்தினைத் தானமாக வழங்கிய தகவலும் இடம் பெற்றுள்ளது.
- இந்தக் கல்வெட்டுகள் கம்பூர் ஒரு காலத்தில் கம்பவூர் என்றும், நத்தத்தைச் சுற்றியுள்ள பகுதிகள் துவாரபதி நாடு என்றும் அழைக்கப்பட்டதாகவும் வெளிப்படுத்துகின்றன.



# தேசியச் செய்திகள்

## சிறப்பு NCD நோய்க் கண்டறிதலுக்கான தீவிரப்படுத்தப்பட்ட பிரச்சாரம்







- மத்திய அரசானது, சிறப்பு NCD நோய்க் கண்டறிதலுக்கான ஒரு தீவிரப்படுத்தப்பட்டப் பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது.

- இந்தப் பிரச்சாரம் ஆனது, ஆயுஷ்மான் ஆரோக்கிய மந்திர்கள் (AAMs) மற்றும் நாடு முழுவதும் உள்ள பல்வேறு சுகாதார மையங்களில் செயல்படுத்தப்படும்.
- இந்த இலட்சிய நோக்க மிக்க முன்னெடுப்பானது, 30 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடைய அனைத்து நபர்களிலும் NCD நோய்கள் உள்ளதா என்பதைக் கண்டறியச் செய்வதற்காக முழு பரிசோதனை செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இதில் நீரிழிவு நோய், உயர் இரத்த அழுத்தம் மற்றும் வாய், மார்பகம் மற்றும் கர்ப்பப் பை வாய் ஆகிய மூன்று பொதுவான புற்றுநோய்களும் அடங்கும்.


## கனிமங்களின் மறுவகைப்பாடு




- சுரங்கத் துறை அமைச்சகம் ஆனது, பாரைட்டுகள் (பாரிய கந்தகை), ஃபெல்ட்ஸ்பார் (களிக்கல்), மைக்கா மற்றும் குவார்ட்ஸ் ஆகியவற்றை "முக்கியக் கனிமங்கள்" ஆக வகைப்படுத்தியுள்ளது.
- தற்போதுள்ள கனிம அகழ்வு ஒப்பந்தங்களை மேலும் 50 ஆண்டுகளுக்கு நீட்டிக்கும் இந்த நடவடிக்கையானது, தற்போது முக்கியமான அறிவியல் மற்றும் தொழில்நுட்பப் பயன்பாடுகளுக்காக அவற்றை வெட்டி எடுக்க அனுமதிக்கிறது.
- இந்தச் சுரங்கங்கள் மிகப் படிப்படியாக இந்தியச் சுரங்க வாரியத்தில் பதிவு செய்யப் பட்டு முக்கியக் கனிமங்களாக ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டும்.
- குவார்ட்ஸ், ஃபெல்ட்ஸ்பார் மற்றும் மைக்கா ஆகியவை பெக்மாடைட் பாறைகளில் காணப் படுகின்றன.
- அவை பெரைல், லித்தியம், நியோபியம், டான்டலம், மாலிப்டினம், டின், டைட்டானியம் மற்றும் டங்ஸ்டன் போன்ற பல முக்கிய கனிமங்களின் முக்கிய ஆதாரமாகும்.
- மின்சார வாகனங்கள், ஆற்றல் மாற்றத் துறை, விண்கலத் தொழில்துறைகள் மற்றும் சுகாதாரப் பராமரிப்பு தொடர்பான தொழில்நுட்பங்களில் இம்முக்கியக் கனிமங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

- தற்போது வரை, குவார்ட்ஸ், ஃபெல்ட்ஸ்பார் மற்றும் மைக்கா சுரங்கங்களுக்கான ஏலக் குத்தகைகள் சிறு கனிம ஏலக் குத்தகைகளாக வழங்கப்படுகின்றன.

## கைதிகள் விடுதலை குறித்த உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு





- கைதிகள் தாங்கள் முன்கூட்டியே விடுதலை செய்யப்பட விண்ணப்பிக்காவிட்டாலும், அவர்களை முன்கூட்டியே விடுதலை செய்வது குறித்து அரசு பரிசீலிக்குமாறு உச்ச நீதிமன்றம் மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டது.
- சில வகையான குற்றவாளிகளுக்கான விதிவிலக்குகளுடன், BNSS மற்றும் CrPC- 1973 ஆகியவற்றின் கீழ் அந்த தண்டனை முடிவதற்குள் சில கைதிகளை விடுவிக்க வேண்டி மாநிலங்களுக்கு அதிகாரம் உண்டு.
- ஒரு கடும் குற்றத்தில் குற்றவாளி எனக் கண்டறியப்பட்ட ஒருவருக்கு வழங்கப்பட்ட தண்டனைக் காலத்தைக் குறைக்கும் அதிகாரத்தினைத் தண்டனைக் குறைப்பு மீதான அதிகாரம் குறிக்கிறது.
- BNSS சட்டத்தின் 473வது பிரிவு (மற்றும் CrPC சட்டத்தின் பிரிவு 432) மாநில அரசுகளுக்கு "எந்த நேரத்திலும்" தண்டனையை விடுவிக்கும் அதிகாரத்தினை வழங்குகிறது.
- மாநில அரசுகளால் வழங்கப்பட்ட விடுதலையை ரத்து செய்து, பிடியாணை எதுவும் இல்லாமல் குற்றவாளியை மீண்டும் கைது செய்யலாம்.
- அரசியலமைப்பின் 72வது மற்றும் 161வது பிரிவின் கீழ் குடியரசுத் தலைவர் மற்றும் ஆளுநர் ஆகியோரின் தண்டனைக் குறைப்பு அதிகாரத்திலிருந்து இது வேறுபட்டது.

## லோக்பால் உத்தரவு மீதான உச்ச நீதிமன்றம் தடை

- உச்ச நீதிமன்றம் ஆனது, உயர் நீதிமன்றங்களில் பணி புரியும் நீதிபதிகள் மீதான புகார்களை விசாரிக்கும் அதிகாரம் கொண்ட லோக்பால் அமைப்பின் உத்தரவிற்குத் தடை விதித்துள்ளது.

- லோக்பால் அமைப்பிற்கு உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி A.M.கான்வில்கர் தலைமை தாங்கினார்.
- உயர் நீதிமன்ற நீதிபதிகள், 'அரசு ஊழியர்கள்' என்றும், அவர்கள் 2013 ஆம் ஆண்டின் லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தாச் சட்டத்தின் வரம்பிற்கு உட்பட்டவர்கள் என்றும் லோக்பால் தீர்ப்பளித்தது.
- இந்தியத் தலைமை நீதிபதி உட்பட உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் விவகாரங்கள் மீது தனக்கு அதிகாரம் இல்லை என்று லோக்பால் அறிவித்திருந்தது.
- உச்ச நீதிமன்றம் என்பது பாராளுமன்ற சட்டத்தினால் நிறுவப்பட்ட அல்லது மத்திய அரசால் நிதியளிக்கப்படும் அல்லது கட்டுப்படுத்தப்படும் "அமைப்பு" அல்ல.
- எனவே, 1988 ஆம் ஆண்டின் ஊழல் தடுப்புச் சட்டத்தின்படி, இந்தியத் தலைமை நீதிபதி உள்ளிட்ட உச்ச நீதிமன்ற நீதிபதிகள் 'அரசு ஊழியர்கள்' என்றாலும், லோக்பாலின் ஒரு அதிகார வரம்பிற்கு அவர்கள் உட்படமாட்டார்கள்.
- 2013 ஆம் ஆண்டு சட்டம் ஆனது, பாராளுமன்றத்தின் சட்டத்தினால் நிறுவப்பட்ட நீதி மன்ற நீதிபதிகளுக்கு வெளிப்படையான விதிவிலக்குகளை அளிக்கவில்லை.





## இந்தியாவில் தற்கொலைகள் வீழ்ச்சி

- இந்தியாவில் 1990 முதல் 2021 ஆம் ஆண்டு வரையில் தற்கொலை காரணமான உயிர் இழப்புகளின் விகிதத்தில் 30 சதவீதத்திற்கும் சரிவு பதிவாகியுள்ளது.
- இந்தியாவில் தற்கொலை காரணமான உயிரிழப்பு விகிதம் ஆனது, 1990 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் மக்களுக்கு 18.9 ஆக இருந்தது.
- 2019 ஆம் ஆண்டில் இது ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு 13.1 லட்சமாகவும், 2021 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு 13 ஆகவும் இருந்தது.
- இந்தியாவில் 1990 முதல் 2021 ஆம் ஆண்டு வரையில், தற்கொலை காரணமான உயிர் இழப்பு விகிதம் 31.5 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- தற்கொலையால் ஏற்படும் உயிரிழப்பு விகிதங்கள் ஆனது, ஆண்களை விட பெண்கள் மத்தியில் அதிகமாகக் காணப்படுகின்றன.
- 1990 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் மக்கள்தொகைக்கு சுமார் 16.8 ஆக இருந்த பெண்களின் தற்கொலை உயிரிழப்பு விகிதம் ஆனது, 2021 ஆம் ஆண்டில் சுமார் ஒரு லட்சம் மக்கள்

தொகைக்கு 10.3 ஆக குறைந்துள்ளது.

- உலகளவில், ஆண்டுதோறும் சுமார் 740,000 தற்கொலைகள் பதிவாகின்றன என்று ஒரு ஆய்வு சுட்டி காட்டுகிறது.
- அதாவது, சராசரியாக ஒவ்வொரு 43 வினாடிகளுக்கும் ஒருவர் தற்கொலை செய்து கொள்கிறார்.
- கடந்த 30 ஆண்டுகளில், வயதிற்கு ஏற்பச் சீரமைக்கப்பட்ட உலகளாவிய உயிரிழப்பு விகிதம் ஆனது சுமார் 40 சதவீதம் குறைந்துள்ளது.




## மின்னணு வடிவப் பணியாளர் உரிமம்





- மத்திய விமானப் போக்குவரத்து அமைச்சர் ராம் மோகன் நாயுடு, விமானிகளுக்கான பொது விமானப் போக்குவரத்துத் துறை இயக்குநரகத்தின் (DGCA) மின்னணு வடிவப் பணியாளர் உரிமத்தினை (EPL) தொடங்கினார்.

- இது சீனாவுக்கு அடுத்தபடியாக விமானப் பணியாளர்களுக்கு என இந்த EPL முறையை அமல்படுத்தும் உலகின் இரண்டாவது நாடாக இந்தியாவை உருவாக்குகிறது.
- ஒவ்வொரு முறையும் விமானிகளுக்கான இம்மின்னணுப் பணியாளர் உரிமம் என்பது அங்கீகரிக்கப் படும் அல்லது புதுப்பிக்கப் படும் போது, eGCA இயங்குந்தளத்தில் (DGCA இயக்குநரகத்தின் இயங்குதளம்) ஒரு நிகழ் நேரத்தில் அது குறித்தத் தகவல் குறிப்பிடப் படுகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## சீனாவில் HKU5-CoV-2




- COVID-19 பெருந்தொற்றினை ஏற்படுத்திய வைரஸைப் போன்ற HKU5-CoV-2 என்ற ஒரு புதிதாக அடையாளம் கண்டுபிடிக்கப்பட்ட வெளவால் கொரோனா வைரஸ் சீனாவில் அடையாளம் காணப்பட்டுள்ளது.
- அங்குள்ள வுஹான் நிறுவனத்தில் கொரோனா வைரஸ்கள் குறித்து மேற்கொள்ளப் பட்ட மிக விரிவான ஆராய்ச்சிக்காக இது பெரும்பாலும் "பேட்வுமன்" என்று குறிப்பிடப் படுகிறது.
- HKU5-CoV-2 என்பது மெர்பெகோவைரஸ் என்ற துணை இனத்தைச் சேர்ந்த புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட வெளவால் கொரோனா வைரஸ் ஆகும்.
- மத்தியக் கிழக்கு சுவாச நோய்க்குறிக்கு (MERS) மிகவும் காரணமான வைரஸும் இதில் அடங்கும்.
- இந்த வைரசானது விலங்குகளிடமிருந்து மனிதனுக்குப் பரவுவதற்கான சாத்தியமான ஆபத்து குறித்து ஆராய்ச்சியாளர்கள் இன்னும் உறுதியாகக் கண்டறியவில்லை.

# பொருளாதாரச் செய்திகள்

## பொதுச் செலவினங்களின் தரம் (QPE) குறித்தக் குறியீடு

- இந்திய ரிசர்வ் வங்கியானது, அரசாங்கம் தனது பணத்தை எவ்வளவு மிகச் சிறப்பாகச் செலவிடுகிறது என்பதை மதிப்பிடுவதற்காக என, 1991 ஆம் ஆண்டிலிருந்துப் பதிவான தரவுகளைப் பயன்படுத்தி 'பொதுச் செலவினங்களின் தரக்' குறியீட்டை உருவாக்கி உள்ளது.

- ❖ இந்தக் குறியீடு ஆனது, செலவினங்களின் பல்வேறு அம்சம் மற்றும் ஒரு நீண்ட காலப் பொருளாதார வளர்ச்சியில் அதன் தாக்கத்தின் அடிப்படையில் பின்வருவனவற்றை மதிப்பிடுகிறது.
- ❖ மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மூலதனச் செலவினங்கள் விகிதம் ஆனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டுத் திட்டங்களுக்கான ஒரு அரசாங்கச் செலவினங்களின் விகிதத்தை அளவிடுகிறது.
- ❖ வருவாய்ச் செலவினங்கள் மற்றும் மூலதனச் செலவின விகிதங்கள் ஆனது, அன்றாடச் செயல்பாட்டு சார் செலவினங்கள் மற்றும் நீண்ட கால முதலீட்டிற்கு இடையிலான ஒரு சமநிலையை மதிப்பிடுகிறது.
- ❖ மொத்தச் செலவினங்களில் மேம்பாட்டுச் செலவின விகிதம் ஆனது சுகாதாரம், கல்வி, ஆராய்ச்சி, உள்கட்டமைப்பு மற்றும் சமூக நலனில் மேற்கொள்ளப்படும் சில பொதுச் செலவினங்களைக் கண்காணிக்கிறது.
- ❖ மொத்தச் செலவினங்களின் சதவீதத்தில் மேம்பாட்டுச் சௌவின விகிதம் ஆனது ஒரு ஒட்டு மொத்த அரசாங்கச் செலவினங்களில் உற்பத்தி முதலீடுகளின் ஒரு மொத்தப் பங்கை மதிப்பிடுகிறது.
- ❖ அரசாங்கத்தின் மொத்தச் செலவின விகிதத்தில் வட்டித் தொகைகள் அரசாங்கத்தின் கடனின் அளவினைப் பிரதிபலிக்கிறது.






*Chart 1: Quality of Public Expenditure index for the Centre. The six colour bands denote the six phases. Source: RBI estimates*

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## பெரோவ்ஸ்கைட் LED மின்விளக்குகள்





- ❖ இந்திய அறிவியல் ஆய்வாளர்கள், பெரோவ்ஸ்கைட் நுண்படிகங்களில் அயனி இடம் பெயர்வைக் குறைப்பதற்காக ஒரு புதுமையான முறையை உருவாக்கியுள்ளனர்.
- ❖ இது வெப்பம் மற்றும் ஈரப்பதத்திற்கான உணர்திறன், அத்துடன் நிறத்தின் உறுதியற்ற

தன்மை போன்ற முக்கியச் சவால்களை எதிர்கொள்ளும்.

- பெரோவ்ஸ்கைட் என்பது CaTiO3 - கால்சியம் டைட்டனேட் போன்ற படிக அமைப்பைக் கொண்ட சேர்மங்களின் ஒரு வகையாகும்.
- இந்தப் பெரோவ்ஸ்கைட் LED மின்விளக்குகள் ஆனது, OLED மற்றும் QLED ஆகிய மின் விளக்குகளின் தன்மையை ஒரு சேரக் கொண்டிருக்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆஸ்திரேலியாவில் 150 பொய் கொலைத் திமிங்கலங்கள்




- ஆஸ்திரேலிய நாட்டின் ஒரு தீவு மாநிலமான டாஸ்மேனியாவில் உள்ள தொலைதூர கடற்கரையில் 150க்கும் மேற்பட்டப் பொய் கொலைத் திமிங்கலங்கள் (False Killer Whales) கரையொதுங்கி சிக்கித் தவித்தன.
- மிகவும் சாதகமற்றப் பெருங்கடல் மற்றும் வானிலை நிலைமைகள் ஆனது அந்தத் திமிங்கலங்களின் மீட்புச் செயல்முறையைத் தடுத்தன.
- உரத்தச் சத்தங்கள், நோய், முதுமை, காயம், வேட்டையாடும் இனங்களிடமிருந்து தப்பி ஓடுதல் மற்றும் மிக கடுமையான வானிலை ஆகியவற்றால் ஏற்படும் திசை திருப்பல் ஆகியவை இதற்கான காரணங்களாக இருக்கலாம்.
- 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், மேற்கு ஆஸ்திரேலியாவின் கீழ்முனையில் உள்ள கடற்கரையில் கரையொதுங்கிய பின்னர் 29 நீண்ட துடுப்பு வலவம் திமிங்கலங்கள் உயிரிழந்தன என்பதோடு மேலும் சுமார் 100 திமிங்கலங்கள் மீட்கப்பட்டன.
- 2023 ஆம் ஆண்டில், மேற்கு ஆஸ்திரேலியாவில் உள்ள ஒரு கடற்கரையில் சுமார் 100 வலவம் திமிங்கலங்கள் கரையொதுங்கின.
- 2022 ஆம் ஆண்டில், சுமார் 230 வலவம் திமிங்கலங்கள் மேற்குக் கடற்கரையில் உள்ள மெக்குவாரி துறைமுகத்தின் தெற்கே கரையொதுங்கின.


- ஆஸ்திரேலிய நாட்டின் வரலாற்றில் மிகப்பெரிய எண்ணிக்கையில் திமிங்கலங்கள் கரை ஒதுங்கிய ஒரு நிகழ்வானது, 2020 ஆம் ஆண்டில் அதே துறைமுகத்தில் 470 நீண்ட துடுப்பு வலவம் திமிங்கலங்கள் மணல் திட்டுகளில் சிக்கிக் கொண்ட நிகழ்வாகும்.

## தென் அமெரிக்க தும்பிப்பன்றி




- பிராந்திய ரீதியாக அழிந்து விட்டதாக என்று கருதப்பட்ட தும்பிப் பன்றி ஆனது, ஒரு நூற்றாண்டுக்குப் பிறகு, தென் அமெரிக்க பிரேசிலில் தென்பட்டுள்ளது.
- இவை தென் அமெரிக்காவின் மிகப்பெரிய நிலவாழ் விலங்கு ஆகும்.
- இது கடைசியாக 1914 ஆம் ஆண்டில் ரியோ டி ஜெனிரோவில் தென்பட்டது.
- அவை ஒரு பன்றிக்கும், மிகச் சிறிய வடிவ யானைக்கும் இடையேயான கலப்பு வடிவம் போன்ற உருவத்தில் காணப்படுகின்றன, ஆனால் உண்மையில் அவை காண்டா மிருகங்கள் மற்றும் குதிரை இனங்களுடன் நெருங்கிய தொடர்புடையவையாகும்.

## பசிபிக் பெருங்கடலில் பெரிலியம்-10




- பசிபிக் பெருங்கடற்பரப்பில் இருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளில் மிக எதிர்பாராத விதமாக பெரிலியம்-10 திரள் காணப்படுவதை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- இந்தப் பெரிலியம்-10 என்பது வளிமண்டலத்தில் உள்ள காஸ்மிக் கதிர்களால் உற்பத்தி செய்யப் படும் ஓர் அரிய வகை கதிரியக்க ஐசோடோப்பு ஆகும், இதன் மூலம் பூமியின் புவியிட வரலாற்றில் மதிப்புமிக்க தகவல்களைப் பெற முடியும்.
- கதிரியக்கக் கரிம காலக் கணிப்பின்படி, இந்த மாதிரிகளின் காலம் சுமார் 50,000 ஆண்டுகளுக்குட்பட்டது.
- பெரிலியம்-10 கனிமத்தின் அரை ஆயுள் காலம் 1.4 மில்லியன் ஆண்டுகள் ஆகும்.

- எனவே இது மில்லியன் கணக்கான ஆண்டுகளாக நிகழ்ந்தப் புவியியல் நிகழ்வுகளின் காலக் கணிப்பிற்கு உதவுகிறது.

## உலகின் உறைகடல் பனி உருகுதல்

- புவியினை மிகவும் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவும் உலகின் உறைந்த பெருங் கடல்களில், முன்பு பதிவு செய்யப்பட்டதை விட தற்போது குறைவான பனிக்கட்டியே காணப் படுகிறது.
- சமீபத்தில் கடல்-பனி அளவில் ஏற்பட்டுள்ள இந்தச் சரிவானது, வெப்பக் காற்று, வெப்ப பெருங்கடல்கள் மற்றும் பனிக் கட்டிகளைச் சிதைக்க கூடிய ஆற்றல் கொண்ட காற்று ஆகியவற்றின் ஒரு சேர்ந்த இயக்கத்தின் காரணமாக ஏற்பட்டதாக தெரிகிறது.
- ஆர்க்டிக் மற்றும் அண்டார்டிக் பெருங்கடல்-பனியின் ஒருங்கிணைந்தப் பரப்பளவு 15.76 மில்லியன் சதுர கி.மீ (6.08 மில்லியன் சதுர மைல்கள்) ஆகும்.
- இது ஜனவரி மாதம் முதல் பிப்ரவரி மாதம் 2023 ஆம் ஆண்டு முதல், 15.93 மில்லியன் சதுர கிமீ (6.15 மில்லியன் சதுர மைல்) என்ற அளவில் முந்தைய 5 நாள் சாதனையை முறியடித்தது.
- ஆர்க்டிக் கடல்-பனி தற்போது ஆண்டில் இதுவரை பதிவு செய்யப்படாத மிகச்சிறிய அளவில் உள்ளது.
- அண்டார்டிக் கடல்-பனி 1970 ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில் சில செயற்கைக்கோள் பதிவுகளில் பதிவான ஒரு புதிய தாழ்வு நிலைக்கு அண்மையினை எட்டியுள்ளது.




## மாபெரும் வலையமைக்கும் பருவம் 2025

- ஒரு இரண்டு ஆண்டுகள் கால இடைவெளிக்குப் பிறகு சுமார் 6.5 லட்சம் ஆலிவ் ரெட்லி ஆமைகள் (சிற்றாமைகள்) பெருமளவில் வலையமைப்பதற்காக ஒடிசாவின் கஞ்சம் மாவட்டத்தில் உள்ள ருஷிகுல்யா கடற்கரைக்கு வந்துள்ளன.
- தற்போது ருஷிகுல்யா கடற்கரைக்கு இதுவரை இல்லாத அதிக எண்ணிக்கையிலான ஆமைகள் வந்துள்ளன.

- 2023-24 மற்றும் 2024-25 ஆம் ஆண்டுகளில், ருஷிகுல்யாவில் ஆங்காங்கே மட்டுமே அவை வலைகளை அமைத்துள்ளன.
- கடைசியாக 2022-23 ஆம் ஆண்டில் மிகவும் அதிக எண்ணிக்கையிலான ஒரு அளவில் ஆமைகள் வலையமைத்தன.
- 1991 ஆம் ஆண்டு முதல், இந்தியக் கடலோரக் காவல்படையானது, 1972 ஆம் ஆண்டு வன விலங்குச் சட்டத்தின் கீழ், அருகி வரும் உயிரினங்களைப் பாதுகாப்பதில் மத்திய மற்றும் மாநில அதிகாரிகளுக்கு தொடர்ந்து உதவி செய்து வருகிறது.







# மாநிலச் செய்திகள்

## உத்தரகாண்ட் நிலச் சட்டத் திருத்த மசோதா





- உத்தரகாண்ட் மாநில அமைச்சரவையானது பூ கனூன் (நிலச் சட்டத் திருத்த மசோதா) மசோதாவிற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- இது 11 மலைப்பாங்கான மாவட்டங்களைச் சேராத நபர்கள், அங்கு வேளாண்மை /

தோட்டக் கலை மற்றும் குடியிருப்பு நிலங்களை வாங்குதல் மற்றும் அதை விற்பனை செய்தல் தொடர்பான கடுமையான விதிகளைக் கொண்டிருக்கும்.

- ❖ வேளாண் நிலங்களை வாங்குவதற்கான முழுமையான தடை மாநிலத் தலைநகரான டேராடூன் மற்றும் வேறு சில மாவட்டங்களில் பொருந்தும்.
- ❖ ஹரித்வார் மற்றும் உதம் சிங் நகர் போன்ற மாவட்டங்களில் வேளாண்/தோட்டக்கலை நிலங்களை வாங்க அனுமதிக்கப்படும்.
- ❖ இந்த நடவடிக்கையானது அந்த மாநிலக் குடிமக்களின் வளங்கள், பெரும் கலாச்சாரப் பாரம்பரியம் மற்றும் உரிமைகளைப் பாதுகாக்கும் என்று கூறப்படுகிறது.

## மிசிங் பழங்குடியினர் - அலி ஐ லிகாங் திருவிழா




- ❖ அசாம் மாநிலத்தின் மிசிங் பழங்குடியினர், சமீபத்தில் அலி அய் லிகாங் என்ற ஒரு திருவிழாவைக் கொண்டாடினர்.
- ❖ அவர்கள் அசாமில் உள்ள மிகப் பெரியப் பழங்குடியினச் சமூகமாகும்.
- ❖ சில உள்ளார்ந்த வேளாண் மரபுகளைக் கொண்ட இந்தத் திருவிழாவானது, விதைப்புப் பருவத்தின் தொடக்கத்தைக் குறிக்கிறது.
- ❖ இது பழங்காலத்திலிருந்தே மிசிங் சமூகத்தால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.
- ❖ இந்தத் திருவிழாவில் ஆண்களும், பெண்களும் தாளத்திற்கு ஏற்றவாறு ஆடுகின்ற ஒரு பாரம்பரிய கும்ராக் நடனமும் அடங்கும்.
- ❖ அவர்கள் திபத்திய - பர்மிய மொழிகளைப் பேசும் தானி சமூகத்தின் ஒரு பகுதியினர் ஆவர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★